அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.446 /2014 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.வா.சா.1 | 06.12.2024 |
| பெயர் உஷா | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

3. 23.03.2016 அன்று எனக்கும் வாதிக்கும் இடையில் ஒரு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் போடப்பட்டது. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் 7 லட்சத்தை நான் வாங்கினேன் என்றால் அன்றைய தினத்தில் மேற்படி பணம் கொடுக்கப்படவில்லை, குத்தகைக்காக ஏற்கனவே ரூபாய் 3,50,000 கொடுத்திருந்தார், ஒப்பந்தத்து அன்று ரூபாய் 50,000 கொடுத்தார் மீதி தொகை பின்பு தருவதாக கூறினார் நம்பிக்கையின் அடிப்படையில் நான் கையெழுத்துப்போட்டேன். மேற்படி விவரத்தை எனது எதிர்உரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கூறும்போது மேற்படி விவரத்தை குறிப்பிட தவறிஇருக்காலாம். அந்த விவரத்தை தற்போது தாக்கால் செய்த

பிரமாணவாக்கு மூலத்திலும்சொல்லவில்லை என்றால் வழக்கறிஞர் தொடர்ந்து வழக்கு பார்த்து வந்ததால் முன்பு இருந்ததையே தொடர்ச்சியாக சொல்லியிருக்காலாம்.

4. மேற்படி விவரத்தை பற்றி வாதியை குறுக்கு விசாரணை செய்யும்போது எந்த கேள்வியும் கேட்கவில்லை என்றால் வழக்கறிஞர் வழக்கை கவணித்து வந்ததால் நான் அதை விட்டுருக்கலாம். அந்த ஒப்பந்தத்தில் சொத்து வரி மற்றும் வங்கி தவணைகளையும் சொத்தை பதிவு செய்து தரும் வரை நான் தான் கட்டவேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வாதி தனது தாவாஉடன் தாக்கல் செய்த 23.03.2014 தேதியிட்ட கிரைய ஒப்பந்தின் நகலை சாட்சியிடம காண்பித்து அது அவர்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தமா என்று கேட்டதற்கு சாட்சி ஒப்புக்கொண்டார் அந்த ஒப்புதலின் அடிப்படையில் ஆவணத்தை குறியீடு செய்ய கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் கோரினார். இந்நீதிமன்றம் தாவாவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் எண் 3 பரிசீலணை செய்து பார்க்கும்போது மேற்படி ஆவணம் நகல் மற்றும் அந்த ஒப்பந்தம் 23.03.2014 அன்று எழுதப்பட்டுள்ளது, அது ஒரு 20 ரூபாய் முத்திரை தாளில் உள்ளது. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன் பணம் ரூபாய் 7 லட்சம் மேற்படி ஆவணனம் ஆனது 2012 ல் இருந்து பிரிவு 17 இந்திய பதிவு சட்டத்தின் கீழ் பதியபட்டிருக்க வேண்டிய ஆவணம் மேலும் அந்த ஆவணத்தின் முத்திரை மதிப்பானது முன் பணத்தில் இருந்து 1 சதவீதம் செலுத்தப்பட்டு இருக்க வேண்டும் . குறியீடு செய்ய கோரப்படும் ஆவணம் ஆனது நகல், அதன் அசல் சமர்பிக்கப்படவில்லை ஆவணத்திற்கு உரிய முத்திரை விலை செலுத்தப்படவில்லை ஆகவே மேற்படி ஆவணம் இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் ஏற்புடையது இல்லை

என்று இந்நீதிமன்றம் கருதுவதால் மேற்படி ஆவணம் குறியீடு செய்ய இந்நீதிமன்றம் உத்தரவு இடுகிறது.

6. மேற்படி ஒப்பந்ததிற்கு பிறகு நான் சொத்து வரி , வங்கி தவணைகளை கட்டவில்லை என்றால் கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட இருந்ததால் சொத்து வரி கட்டவில்லை , வங்கி தவணைகளை பொருத்தவரை ஏற்கனவே வங்கியிடம் கிரையம் பற்றி தெரிவித்திருந்ததால் அவர்கள் என்னை தொந்தரவு செய்யவில்லை. சொத்து வரி கட்டுவதற்கு கட்ட சொத்து வரி புத்தகத்தை அவர் என்னிடம் கேட்டார் நான் மற்ற ஆவணங்களுடன் ஒப்பந்தம் போடும்போதே அவரிடம் கொடுத்துவிட்டேன்.

7. 2011 ல் இருந்து சொத்து வரி நிலுவையில் இருந்தது என்றால் எனது விற்பனையாளர் பெயர் இருந்து என்பெயருக்கு மாற்ற வேண்டி காத்துக்கொண்டிருந்தேன், ஒப்பந்ததிற்கு பிறகு ஒரு 3 ஆயிரம் ரூபாயை எனக்கு தெரியாமலேயே வாதி கட்டிவிட்டார் என்னிடம் சொல்லியிருந்தால் நான் கட்டிருப்பேன்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)